ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம்
**Tamil Study Centre, Homebush Inc**
Postal Address:P o Box 4019, Homebush NSW
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2012

வகுப்பு: பாலர் வகுப்பு

திகதி:- 16-06-2012 நேரம்: 2 மணித்தியாலம்

ஆசிரியர்கள்: திருமதி பத்மா இராமகிருஷ்ணசுவாமி
திருமதி.சாந்தி மயூரன்

மாணவர் பெயர்------------------------------------------------

1. உங்கள் பெயரை எழுதுங்கள் (6 புள்ளிகள்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

2. உயிர் எழுத்துக்களையும் ஆய்த எழுத்தையும் எழுதுங்கள் (13 புள்ளிகள்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | ----------<br>---------- |

3.பார்த்து எழுதுங்கள் (6 புள்ளிகள்)

அம்மா

| | | |
|---|---|---|
| | | |


அப்பா

| | | |
|---|---|---|
| | | |



4.பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுங்கள்

(20புள்ளிகள் )

(அம்மா, அப்பா, தம்பி, தங்கை, அக்கா)

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

5.படங்களுடன் பொருத்தமான சொல்லை இணையுங்கள்.
(5புள்ளிகள்)

| | |
|---|---|
|  | ஈ |
|  | ஆமை |
|  | ஏணி |
|  | சிங்கம் |
|  | கப்பல் |

6.பின்வரும் சொற்களில் உள்ள உயிர் எழுத்துக்களைச் சுற்றி வட்டம் போடுங்கள்.

(20 புள்ளிகள்)

அம்மா அப்பா ஆடு ஆமை ஈ

உரல் இலை ஊசி எலி ஐந்து

7.விடுபட்ட எழுத்தைக் கோடுள்ள இடத்தில் எழுதி நிரப்புங்கள்.

(16 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| டு | ட் | ணி | ஞ் |

ஆ-------

ஏ-------

ஊ——---சல்

ஈ-------டி

8. **சொல்வதை எழுதுங்கள்.** (6புள்ளிகள்)

1. ………………….

2.………………….3…………………….

9. **படத்தில் உள்ளவற்றிற்கு உரிய சரியான நிறத்தைத் தெரிந்து எழுதுங்கள்** (8. .புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| ஊதா | கறுப்பு | மஞ்சள் | பச்சை |

| | |
|---|---|
|  | |
|  | |
|  | |
| | |



தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2012

முதலாம் வகுப்பு

திகதி:- 16-06-2012

ஆசிரியர்கள்:

திருமதி. கனகேஸ்வரி வடிவேற்பிள்ளை

திருமதி. கலைவாணி ஜெயராஜா

மாணவர் பெயர்:-

1. பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.



இவர் என் ......................................



இவர் என் ......................................



இவர் என் ......................................



இவர் என் ......................................



இவர் என் ......................................

(20 புள்ளிகள்)

2. படத்திற்குரிய சொல்லை தெரிந்து எழுதுங்கள்

திராட்சைப்பழம், அன்னாசிப்பழம், தோடம்பழம், அப்பிள் பழம், பப்பாளிப்பழம்












(20 புள்ளிகள்)

3. உடல் உறுப்புகளின் பெயர்களை எழுதுக?











(20 புள்ளிகள்)

4. பின்வரும் படங்களுக்குரிய சுவைகளை எழுதுக.

இனிக்கும், உவர்க்கும், புளிக்கும், கசக்கும், உறைக்கும்











(20 புள்ளிகள்)

5. சொற்களை உருவாக்குக

1) பு ப் வ சி

2) ள் சு ம ஞ்

3) பு ப் று க

4) ள் வெ ளை

5) சை ப ச்

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2012

வகுப்பு: இரண்டு திகதி:- 16-06-2012 நேரம்: 2மணி

ஆசிரியர்கள்: திருமதி கனகேஸ்வரி வனதேவா
திருமதி கலா விக்னேஸ்வரன்

**மாணவர் பெயர்:-**

______________________________

1. கீழ் வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

கமலா மிகவும் புத்தியுள்ள மாணவி. அவள் எப்போதும் சுத்தமான ஆடைகளை அணிவாள். தன் விரல் நகங்களை வெட்டிச் சுத்தப்படுத்துவாள். அவள் நேரம் தவறாமல் சத்துள்ள உணவுகளை உண்பாள். ஓய்வு நேரங்களில் சிநேகிதர்களுடன் விளையாடுவாள். பிள்ளைகளே, கமலா போல் நீங்களும் கெட்டிக்காரியாக வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.

1) கமலா ------------------------------ மாணவி.
2) அவள் ------------------------------ ஆடைகளை அணிவாள்.
3) கமலா ------------------------------ வெட்டிச் சுத்தப்படுத்துவாள்.
4) கமலா சத்துள்ள ------------------------------உண்பாள்.
5) சிநேகிதர்களுடன் ----------------------------விளையாடுவாள்.

(20 புள்ளிகள்)

2)இடைவெளி நிரப்புக.

ப் ம் ன் த் ண் ந் ங் ல் ள் க்

| | |
|---|---|
| அ----பம் | உறவின---- |
| நி-----திரை | த----கை |
| பா------- | சூரிய----- |
| ப------ளிக்கூடம் | க----ணன் |
| அ----கா | முக----- |

(15 புள்ளிகள்)

3) சோடி சேர்க்க.

| | |
|---|---|
| கடவுளை | குடி |
| சீருடை | வணங்கு |
| பால் | துலக்கு |
| முகம் | அணி |
| பல் | கழுவு |

(15புள்ளிகள்)

4) பொருத்தமான சொல்லை எழுதுக.

1.மாம்பழம் ---------------------- நிறம்.
ஊதா
மஞ்சள்
சிவப்பு

2.மயில் அழகாக ------------------------
பாடும்
பாயும்
ஆடும்

3.பாடசாலை மணி ----------------------------
இடித்தது
படித்தது
ஒலித்தது

4.நாய் வள் வள் என்று ---------------------
கனைக்கும்
குரைக்கும்
சீறும்

5.வாழைப்பழம் உண்டால் -------------------------
புளிக்கும்
இனிக்கும்
உறைக்கும்

(15 புள்ளிகள்)

5)வசனங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

மாமா / இவர் / எங்கள்

--------------------------------------------------------------------------------

குளித்து/ அப்பா / விட்டாரா?

--------------------------------------------------------------------------------

தனது// எடுத்தான் /பையை / கண்ணன்

--------------------------------------------------------------------------------

வாணியின்/ சாந்தி/ சினேகிதி

-----------------------------------------------------------------------------------

பந்தை/ நான் /அண்ணா /மறந்து /விட்டேன். (20புள்ளிகள்)

-----------------------------------------------------------------------------------

6) பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 3 வசனம் எழுதுக.

1. எனது குடும்பம்
2. என்னைப் பற்றிய விபரம்
3. எனது செல்லப்பிராணி

-----------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------

(15 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2012

வகுப்பு: 3 திகதி:- 16-06-2012 நேரம்: 2 மணித்தியாலம்

*ஆசிரியர்கள்:*
திருமதி நிர்மலா தயாளன்
கலாநிதி மாலினி ஆனந்தகிருஷணன்

**மாணவர் பெயர்:-**

1. **கீழே தரப்பட்ட பந்திகளை வாசித்து சரியான விடையை எழுதுக.** (15 புள்ளிகள்)

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். இதனை இளங்கோ அடிகள் எழுதினார். சிலப்பதிகாரம் கோவலன் கண்ணகி ஆகியோரின் கதையைக் கூறுகின்றது. கோவலன் கண்ணகியின் சிலம்பை விற்கவென மதுரைக்கு எடுத்துச் சென்றான். ஆனால் மதுரையில் அவனை அரசியின் சிலம்பைத் திருடியவன் எனக் குற்றஞ் சாட்டினார்கள். இறுதியில் குற்றம் சாட்டப்பட்ட கோவலன் காவலர்கள்ல் கொல்லப்பட்டான். இதையறிந்த கண்ணகி அரசனிடம் சென்று தன் கணவன் கள்வன் அல்ல என நிரூபித்தாள். நீதி தவறியதால் பாண்டிய மன்னன் இறந்தான். பின்பு கண்ணகி மதுரை மாநகரை எரித்தாள். கற்புக்கரசி கண்ணகி எனப் பெயர் பெற்றாள். இதுவே சிலப்பதிகாரத்தின் கதைச்சுருக்கம் ஆகும்.

1) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

2) சிலப்பதிகாரம் யாரின் கதையைக் கூறுகின்றது?

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

3) கோவலன் கண்ணகியின் சிலம்பை விற்க எங்கு சென்றான்?

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

4) நீதி தவறியதால் இறந்தது யார்?

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

5) கற்புக்கரசி என்று பெயர் பெற்றது யார்?

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

**2. சொற்களைக் கண்டு பிடியுங்கள்** (10 புள்ளிகள்)

1) பலவகை

-----------------------------------------------------------------------------------------------

2) பாதுகாப்பு

-----------------------------------------------------------------------------------------------

3) நடவடிக்கை

-----------------------------------------------------------------------------------------------

4) வளையல்

-----------------------------------------------------------------------------------------------

5) கால்வாய்

-----------------------------------------------------------------------------------------------

**3. சேர்த்து எழுதுக.** (10 புள்ளிகள்)

1) தொலை + காட்சி . . . . . . . . . . . . . . . .

2) தொலை + தொடர்பு . . . . . . . . . . . . . . . .

3) வாழை + பழம் . . . . . . . . . . . . . . . .

4) தமிழ் + பாடம் . . . . . . . . . . . . . . . .

5) புத்தகம் + கடை . . . . . . . . . . . . . . . .

**4. எதிர்ச்சொல் எது? இணைத்துக் காட்டுக.** (10 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| 1 | இரவு | பகைவன் |
| 2 | பெருமை | பகல் |
| 3 | நண்பன் | துன்பம் |
| 4 | இன்பம் | பின் |
| 5 | முன் | சிறுமை |

**5. பன்மைப் படுத்துக.** (10 புள்ளிகள்)

1) பழம் . . . . . . . . . . . . . . .

2) இடம் . . . . . . . . . . . . . . .

3) இலை . . . . . . . . . . . . . . .

4) காப்பு . . . . . . . . . . . . . . .

5) பூ . . . . . . . . . . . . . . .

**6. வசனமாக ஒழுங்கு படுத்தி எழுதுக.** (15 புள்ளிகள்)

1) அழையுங்கள் வீடு என்னை திரும்பியதும்

--------------------------------------------------------------------------------

2) விடுவார் தேங்காயை ஒருவர் உருட்டி

--------------------------------------------------------------------------------

3) இங்கே இல்லையா போட்டிகள் உங்களுக்கு

--------------------------------------------------------------------------------

4) வாணி நான் சொன்னாள் கேட்க

---

5) கதைகள் நல்ல கேட்கலாம் தாத்தாவுடம்

---

7. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்து குறைந்தது ஐந்து வசனங்கள் எழுதுக.** (15 புள்ளிகள்)

1) எனது குடும்பம்
2) வகுப்பறைப் பொருட்கள்
3) அன்னையர் தினம்

---

---

---

---

---

---

---

---

8. **தமிழ்ப் பாடசாலையின் வெள்ளிவிழா (கலைவிழா) குறித்து தாத்தா பாட்டிக்கு கடிதம் எழுதுக.**

அல்லது

**விடுமுறை நாட்களைக் கழித்தது குறித்து தோழிக்கு கடிதம் எழுதுக.** (15 புள்ளிகள்)

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

---

# அரையாண்டுப் பரீட்சை 2012

4 ம் வகுப்பு

திகதி:- 16-06-2012

நேரம்: 2 மணித்தியாலங்கள்


ஆசிரியர்கள்:
திருமதி செ சிவசுப்பிரமணியம்
திருமதி செ ஜெயமனோகர்

மாணவர் பெயர்:-

______________________________________________

1. பின்வரும் தகவலை வாசித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக:

சிட்டுக் குருவிகள்



பங்குனி மாதம் இருபதாம் தேதியைச் சிட்டுக்குருவிகள் தினமாக அறிவித்து உள்ளார்கள். எல்லா நாடுகளிலும் குழந்தைகள் மிக நெருக்கத்தில் பார்த்து வியக்கின்ற முதற் பறவை சிட்டுக்குருவியாகத்தான் இருக்கும் என்று கூறலாம். இன்று சிட்டுக்குருவிகள் திடீரென நம்மிடம் இருந்து மறைந்து வருவதற்கான காரணத்தை உலகம் முழுவதிலும் உள்ள பல இயக்கங்கள் விடை தேடி அலைகின்றன.

நமது கைக்கு எட்டும் தூரத்தில் தத்தி விளையாடும் இந்தச் சின்னஞ்சிறு உயிர்கள் இன்னும் எத்தனை மிச்சம் இருக்கின்றன என்பது பற்றிக் கணக்கெடுப்பும் நடக்கினறது.

அழிக்கப்படும் மரங்கள், சுருங்கி வரும் வயல்கள், என்பவற்றால் புழு, பூச்சிகள் கொல்லப்பட்டுவிட்டன. இயற்கையின் அழிவே இக்குருவிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருகின்றன. "வலியதே வாழும்" என்ற தத்துவத்தை நியாயப்படுத்தி வாழ்பவன் மனிதன். இதனால் மனிதன் தன் தேவைகளைக் கூட்டிக் கொள்கிறான். அவன் தனது வாழ்வை மேம்படுத்தும் போது அழிவது இயற்கையும் மற்றும் வலிமையற்ற உயிரயங்களும்தான். இவ்வாறு அழியும் இந்தச் சிட்டுக்குருவிகளைக் காக்க வேண்டிய பொறுப்பு எல்லோரிடத்திலும் உள்ளது எனலாம்.

1.1) எந்தத் தினத்தை சிட்டுக்குருவிகள் தினமாக அறிவித்துள்ளார்கள்?

..........................................................................................................

..........................................................................................................

1.2) இக் கட்டுரையில் எச் சிறு பறவையினம் அழிந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

..........................................................................................................

..........................................................................................................

1.3) ஏன் பல இயக்கங்கள் கணக்கெடுப்பு நடத்துகிறார்கள்?

..........................................................................................................

..........................................................................................................

1.4) இக் கட்டுரையில் கூறப்படும் தத்துவம் யாது?

..........................................................................................................

..........................................................................................................

1.5) மனிதனின் தேவைகள் கூடுவதால் அழிவது யாது?

..........................................................................................................

..........................................................................................................

(20 புள்ளிகள்)

2. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்கு படுத்தி வாக்கியம் அமைக்குக.

2.1) கிழக்கு / சூரியன் / ஒளிக்கதிர்கள் / வானில் / தாவின

..............................................................................................................

..............................................................................................................

2.2) பறவை / மிகச் / மைனா / சாந்தமான

..............................................................................................................

..............................................................................................................

2.3) செய்கிறான் / உற்பத்தி / விவசாயி / உணவை

..............................................................................................................

..............................................................................................................

2.4) எமது / நடந்தது / மிகச் / கலைவிழா / சிறப்பாக

..............................................................................................................

..............................................................................................................

2.5) வாழியவே / வாழ்க நிரந்தம் / வாழிய / வாழ்க தமிழ்மொழி

..............................................................................................................

..............................................................................................................

(15 ள்ளிகள்)

3.1) தொடர்பு படுத்துக

| | |
|---|---|
| மொழி | இளவேனில் |
| உணவு | தமிழ் |
| சூரியன் | வடக்கு – தெற்கு |
| காலம் | ஒளி |
| திசைகள் | உற்பத்தி |

(5 புள்ளிகள்)

3.2) பின்வருவனவற்றிக்கு ஒத்த சொற்கள் தருக.

| | |
|---|---|
| புதினம் | |
| வண்ணம் | |
| சூரியன் | |
| ஆகாயம் | |
| விழி | |

(5 புள்ளிகள்)

4. கீழே தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து 5 வசனங்கள் எழுதுக.
(துணைச் சொற்கள்: கடற்கரை, கப்பல், மணற்கோட்டை, வாளி, பந்து, நீச்சல்)



4.1)..........................................................................................................................................
..........................................................................................................

4.2)..........................................................................................................................................
..........................................................................................................

4.3)..........................................................................................................................................
..........................................................................................................

4.4)..........................................................................................................................................
..........................................................................................................

4.5)..........................................................................................................................................
..........................................................................................................

(15 புள்ளிகள்)

5) தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழாவில் நீர் பங்கு பற்றியது உமது நண்பருக்கோ, அல்லது உங்கள் உறவினருக்கோ கடிதம் எழுதவும்.
(20 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 10 வசனங்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக.

6.1) எனது விடுமுறைக் காலத்தை எவ்வாறு கழித்தேன்?
6.2) தமிழர்களின் காலை உணவுகள்
6.3) எனது பொழுது போக்கு
(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2012

வகுப்பு: ஆண்டு 5 திகதி:- 16-06-2012

நேரம்: 2 $^1/_2$ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி திருமதி பு. புருஷோத்தமர்

மாணவர் பெயர்:-

<u>வினா 1:</u> கீழ்வரும் பந்தியை வாசித்தபின் வினாக்களுக்கு விடை தருக. (20 புள்ளி)

இந்தியாவிலே பாடலிபுரம் என்று ஒரு நகரம் உண்டு. அங்கே ஓர் ஏழை இருந்தான். அவனுக்கு தாய் தந்தையர் இல்லை. இளவயதிலே திருத்தி நல்வழிப்படுத்த ஒருவரும் இல்லாததால், அவன் எல்லா விதமான தீய செயல்களையும் செய்து வந்தான். ஊரவர்கள் அவனைக் கண்டால் வெறுத்து ஒதுக்கினார்கள்.

ஒரு நாள் ஒரு துறவி அவனைக் கண்டு இரக்கப்பட்டு அவனுக்கு நற்புத்தி கூற எண்ணினார். அவனைப் பார்த்து "நீ செய்யும் பாவங்களில் ஒன்றையாவது விட்டு விடு" என்று கூறினார். ஏழையும் "சரி நான் எதை விட வேண்டும்?" என்று கேட்டான். துறவி "இன்று முதல் பொய் சொல்லக் கூடாது" என்று சொன்னார். அவனும் அன்று முதல் பொய்பேசுவதைக் கைவிட்டான்.

ஒருநாள் இரவு அவன் அந்த நகரத்து அரண்மனையில் திருடச் சென்றான். மாறு வேடத்தில் நகர பரிசோதனைக்கு வந்த அரசன் திருடனைக் கண்டான். "நீ யார்? இங்கு என்ன செய்கிறாய்?" என்று கேட்டான். திருடன் "நான் இந்த அரண்மனையில் திருட வந்தேன்" என்று பதில் அளித்தான். அதைக்கேட்டு வியப்படைந்த அரசன், "நானும் திருடத்தான் வந்தேன். என்னிடம் அரண்மனைத் திறப்புகள் உள்ளன. இதோ, இவற்றைக் கொண்டு சென்று திருடு. திருடுவதில் எனக்குப் பாதி கொடு" என்றான்.

அரண்மனைக்குச் சென்ற திருடன் ஆபரணப் பேழையைத் திறந்து இரண்டு இரத்தினங்களோடு வந்தான். "அங்கே மூன்று இரத்தினங்கள் இருந்தன. எனக்கு ஒன்றும் உனக்கு ஒன்றும் ஆக இரண்டை எடுத்து வந்தேன்" என்று கூறி ஒரு இரத்தினத்தை அரசனுக்கு கொடுத்தான். திருடனின் பேர், ஊர் அறிந்து கொண்டு அரசனும் அரண்மனைக்குச் சென்று விட்டான்.

மறுநாள் அரண்மனையில் களவு நடந்த செய்தி எங்கும் பரவியது. அரசனுக்கும் அறிவிக்கப்பட்டது. அரசனும் ஏதும் அறியாதவன் போல் மந்திரியை அழைத்து என்ன களவு போயின என்று பார்த்து வரும்படி அனுப்பினான். மந்திரி உள்ளே போய், களவு போகாத ஒரு இரத்தினத்தை தான் மறைத்து வைத்துக் கொண்டு, "எல்லா இரத்தினங்களும் களவு போய் விட்டன" என்று கூறினான். உடனே அரசன் திருடனை அழைப்பித்து முதல் நாள் இரவு நடந்தவற்றை அவன் மூலம் எல்லாரும் அறியச் செய்தான். மந்திரி திருட்டுக் குற்றத்திற்காக சிறை சென்றான். திருடன் உண்மை கூறியதால் மதிக்கப்பட்டான்.

1. ஏழையை ஏன் ஊரவர்கள் வெறுத்தார்கள்? (2 புள்ளிகள்)

------------------------------------------------------------

------------------------------------------------------------

2. துறவி ஏழைக்கு கூறிய புத்திமதி என்ன? (2 புள்ளிகள்)

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

3. ஏழை ஒரு நாள் இரவு எங்கே திருட வந்தான்? (1 புள்ளி)

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

4. மாறுவேடத்தில் வந்த அரசன் கேட்ட கேள்விக்குத் திருடன் என்ன பதில் அளித்தான்? (2 புள்ளிகள்)

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

5. திருடன் என்று அறிந்ததும் அரசன் அவனிடம் கூறியது என்ன? (2 புள்ளிகள்)

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

6. திருடன் அரண்மனையில் திருடியவை எவை? (1 புள்ளி)

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

7. திருடன் மாறுவேடத்திலிருந்த அரசனுக்கு என்ன கூறினான்? எதைக் கொடுத்தான்? (4 புள்ளிகள்)

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

8.மந்திரி ஏன் சிறை சென்றான்? (2 புள்ளிகள்)

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

9. திருடன் ஏன் மதிக்கப்பட்டான்? (2 புள்ளிகள்)

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

**வினா 2:**

2 (A) கீழ் வரும் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் எழுதுக.

(10 புள்ளிகள்)

1. நாடு :

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. விவேகானந்தர் :

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. மகிழ்ச்சி :

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. கம்பர் :

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

5. பாடசாலை :

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2 (B) கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்க.

(10 புள்ளிகள்)

1. பண்டைய, மதுரையில், சிற்பக், தமிழரின், காணலாம், கலைத்திறனை,

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. வாழும் நாடு, இஸ்லாமியர், சேர்ந்து, கிறிஸ்தவர்கள், தமிழ்நாடு, இந்துக்கள்,

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

3. தாய்நாடு, ஈழம், என்றும், தமிழ்நாடு, என்றும், சேய்நாடு, குறிப்பிடப்பட்டுள்ளன,

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

4. அண்ணன், நான், இராமன், அயோத்தியை, இருக்க, மாட்டேன், செய்ய, ஆட்சி,

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

5. சந்நியாசி, இராம இலக்குமணர், வேடத்தில், வந்தான், இல்லாதவேளை, இராவணன்,

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

வினா (3)

பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை அறிந்து கீழுள்ள அட்டவணையில் எழுதுக. (15 புள்ளிகள்)

1. குகன் இராம இலக்குமணரை அன்புடன் வரவேற்றான்.

2. பாரதியார் மூத்தபுலவரை புகழ்ந்து பாடினார்.

3. கம்பரை "கவிச்சக்கரவர்த்தி" என்று நாம் போற்றுகிறோம்.

4. சீதையை இராவணன் அசோகவனத்தில் சிறை வைத்தான்.

5. பிள்ளைகள் பெற்றோரை வயது முதிர்ந்த காலத்தில் பராமரிக்க வேண்டும்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

வினா (4)

தரப்பட்ட சொற்களைச் சரியான வடிவத்தில் பயன்படுத்தி வாக்கியத்தை பூரணமாக்குக. (10 புள்ளிகள்)

1. கம்பர்.....................................இராமாயணத்தை எழுதினார். (தமிழ்)

2. தசரதன் .................................... முடிசூட்டி அயோத்தியின் மன்னன் ஆக்க விரும்பினான். ( இராமன்)

3. இராமனின் ...................................... சிம்மாசனத்தில் வைத்து பரதன் அயோத்தியை அரசு செய்தான். (பாதுகை)

4. அனுமன் ....................................... சென்று அசோகவனத்தில் சீதையைக் கண்டான். (இலங்கை)

5. ஒலிம்பிக் விளையாட்டுகளைப் .................................... நாம் இங்கிலாந்து செல்லவுள்ளோம். (பார்)

**<u>வினா (5)</u>**

கட்டுரை எழுதுதல். (20 புள்ளிகள்)

பின்வருவனற்றுள் ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 15 வசனங்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. திருவள்ளுவர்
2. எனது பாடசாலை வெள்ளி விழா
3. நான் பார்த்து இரசித்த ஓர் இடம்
4. எனது "ஒரு நாள் சுற்றுலா"
5. மகாத்மா காந்தி

வினா (6)

கடிதம் எழுதுதல். (15 புள்ளிகள்)

உமது பாடசாலைப் பரிசளிப்பு விழா / கலைவிழாவிற்கு வரும்படி கேட்டு உமது தாத்தா பாட்டிக்குக் கடிதம் எழுதுக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2012

வகுப்பு: 6 திகதி:- 16-06-2012 நேரம்: 2 ½ மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி குலராஜா

**மாணவர் பெயர்:-**

1. **பின்வரும் பந்திகளை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.** (20 புள்ளிகள்)

இன்றைய கால கட்டத்தில் உலகில் வாழ்கின்ற பெரும்பாலான மக்களைக் கவர்ந்ததாக இசை விளங்குகின்றது. இதனாலேயே முத்தமிழில் ஒன்றாக இசைத் தமிழ் விளங்குகின்றது. "இசையால் மயங்காத இதயம் ஒன்றில்லை" என்று கவிஞர் ஒருவர் பாடினார். "இசை கேட்டுப் புவி அசைந்தாடும் அது இறைவன் வரமாகும்" என்று இன்னொரு கவிஞர் பாடினார். இத்தகைய சிறப்பு வாய்ந்த இசை இயற்கையின் கூறுகளிலிருந்தே உருவானது என்று அறிஞர் கூறுவர். மூங்கில் மரங்களின் துவாரங்களினூடாக காற்று வீசுகின்றபோது குழல் இசை தோன்றியது. மலையிலிருந்து ஊற்றெடுத்து நதி நீர் பாய்ந்து வருகின்றபோது தாள இசை தோன்றியது. அதிகாலைப் பொழுதை வரவேற்று பறவைகள் பாட்டுப் பாடுகின்றன.

இவ்வாறு இயற்கையின் அம்சங்களிலிருந்து தோற்றம் பெற்ற இசை பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட பலவிதமான கருவிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இந்தக் கருவிகளை வாத்தியங்கள் என்று அழைத்தார்கள். அவை தோல் வாத்தியங்கள், துளை வாத்தியங்கள், நரம்பு வாத்தியங்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன. தவில் எனப்படுகின்ற மேளம், மிருதங்கம், தபேலா போன்றன தோல் வாத்தியங்கள் ஆகும். புல்லாங்குழல், நாதஸ்வரம் போன்றன துளை வாத்தியங்கள் ஆகும். வீணை, வயலின் போன்றன நரம்பு வாத்தியங்களாகும். தமிழர்களால் மங்கள வாத்தியங்கள் என்று பெருமையாகப் போற்றபடுகின்ற வாத்தியங்களாக தவில் (மேளம்), நாதஸ்வரம் என்பன விளங்குகின்றன.

1) எது முத்தமிழில் ஒன்றாக விளங்குகின்றது?

--------------------------------------------------------------------------------

2) இசையைப்பற்றி கவிஞர் ஒருவர் எவ்வாறு பாடினார்?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3) இசையைப்பற்றி இன்னொரு கவிஞர் எவ்வாறு பாடினார்?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4) இசை எவ்வாறு உருவானது என்று அறிஞர் கூறுவர்?

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

5) இயற்கையில் இருந்தே இசை உருவானது என்பதற்கு இரண்டு உதாரணங்கள் எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

6) பிற்காலத்தில் இசை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது?

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

7) மூன்று வகை வாத்தியங்களும் எவை?

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

8) தோல் வாத்தியங்கள் இரண்டு எழுதுக?

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

9) நரம்பு வாத்தியங்கள் இரண்டு எழுதுக?

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

10) தமிழர்களின் மங்கள வாத்தியங்கள் எவை?

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

**2. கீழே உள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தாருங்கள்.** (15 புள்ளிகள்)

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

1. வாழ்க என்பதன் எதிர்ச்சொல் என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------

2. ஆகாயம் என்பதற்கு இப்பாடலில் உள்ள ஒத்தசொல் எது?

-----------------------------------------------------------------------------------------------------------------------

3. இப்பாடலில் குறிப்பிடப்படும் ஒரு இலக்கம் என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------

4. வண்மொழி என்றால் என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------

5. "இசை கொண்டு வாழியவே" என்பதில் இசை கொண்டு என்பது:

   (புகழோடு / இசையோடு ) என்பதாகும்.

-----------------------------------------------------------------------------------------------------------------------

3. **அட்டவணை 'அ' வில் உள்ள சொல்லுடன் மிகப் பொருந்தக்கூடிய சொல் 'ஆ' அட்டவணையுடன் இணையுங்கள்:** (5 புள்ளிகள்)

| | அ | ஆ |
|---|---|---|
| 1 | வைத்தியர் | பரதநாட்டியம் |
| 2 | பாடசாலை | பந்து |
| 3 | வாத்தியம் | நோயாளி |
| 4 | விளையாட்டு | வகுப்பறை |
| 5 | தமிழ்க்கலை | வயலின் |

4. **இடை வெளியை நிரப்புங்கள்:** (10 புள்ளிகள்)

1) நேற்றுக் கடும் . . . . . . . . . . பெய்தது. (மலை / மழை)

2) கண்ணன் சுவரில் . . . . . . . . அறைந்தான் (ஆனி / ஆணி)

3) பாலில் சீனிபோட்டு . . . . . . . . . .. . . குடித்தால் இனிக்கும். (கரைத்துக் /கறைத்துக்)

4) வாணியின் காலில் . . . . . . . . . . . குத்தியது. (முல்லுக் / முள்ளுக்)

5) எமது நாடு . . . . . . . . . . செழிக்கும் நாடு. (வளம் / வழம்)

5. **பெயராகவும் வினையாகவும் வர வசனம் அமையுங்கள்:** (20 புள்ளிகள்)

1.) படி பெயர் ------------------------------------------------------------

வினை ------------------------------------------------------------

2.) ஆடு பெயர் ------------------------------------------------------------

வினை ------------------------------------------------------------

3.) முடி பெயர் ------------------------------------------------------------

வினை ------------------------------------------------------------

4.) உடை பெயர் ---------------------------------------------------------------

வினை---------------------------------------------------------------

5.) கரை பெயர் ---------------------------------------------------------------

வினை ---------------------------------------------------------------

6. **கடிதம் எழுதுதல்**

தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழாவைப்பற்றி இலங்கையில் இருக்கும் உமது உறவினருக்கு ஒரு கடிதம் எழுதுக. (15 புள்ளிகள்)

--------------------------------------
--------------------------------------
--------------------------------------
--------------------------------------

--------------------------------------

---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------
---------------------------------------------------------------

7. பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.** (15 புள்ளிகள்)

1. நான் கொண்டாடி மகிழ்ந்த ஒரு பண்டிகை
2. எனது பிறந்த தின விழா
3. அவுஸ்திரேலியாவின் காலநிலை

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2012

7ம் வகுப்பு

திகதி:- 16 -06-2012

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி சா விஜயநாதன்

மாணவர் பெயர்:-

______________________________

1. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

கண்ணுக்கும் காதுக்கும் மகிழ்ச்சி அளிப்பது நாடகக்கலை! புழைய காலத்தில் இருந்தே தமிழ் மக்கள் நாடகக் கலையில் சிறப்பு பெற்றிருந்தனர்.

பிற்காலத்தில் நாடகக்கலை பலவாறாகப் பிரிந்து மக்களின் வாழ்க்கை இயல்புகளுக்கு ஏற்ப மாறி வந்ததை அறிய முடிகிறது. பழைய காலத்தில் பள்ளு, தெருக்கூத்து, குறவஞ்சி போன்ற நாடகங்கள் தமிழில் இருந்திருக்கின்றன. இவை பாடல்களாலும் ஆடல்களாலும் ஆக்கப்பட்டவை விழாக்கள் நடைபெறும் அதற்கேற்ப நாடகங்களை நடாத்திவந்தனர். பெரும்பாலும் ஊர் மன்றமும் கோயில் வீதிகளுமே நாடகம் நடக்கும் இடங்களாக அமைந்தன. திறந்த வெளியில் தீப்பந்த ஒளியில் இருவரால் பிடிக்கப்பட்ட திரைச்சேலைக்கு முன்னால் நாடகங்கள் நடித்தனர்.

அண்மைக் காலத்தில் தமிழ் நாடகம் புதிய வளர்ச்சியை எட்டியுள்ளது. நாடகத்தைக் கற்றவர்கள் நாடகங்கள் எழுதவும், நடிக்கவும் முன்வந்துள்ளனர். நாடக மேடையில் பலவிதமான உத்திமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

ஆங்கிலத்தில் சிறந்த நாடக ஆசிரியர் என்று வில்லியம் சேக்ஷ்பியரைக் குறிப்பிடுவார்கள். அதுபோல தமிழிலும் நாடக ஆசிரியர்கள் இருந்திருக்கின்றனர். நடிகமணி வைரமுத்து, கலையரசு சொர்ணலிங்கம், குழந்தை சண்முகலிங்கம் போன்ற பலர் நாடகத்திற்கு சிறந்த பணியாற்றியுள்ளனர்.

தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் குடியேறிய பின்னர் பல நாடுகளில் நாடகங்களை மேடையேற்றி வருகிறார்கள். அதே வேளை இன்று வானொலி, தொலைக்காட்சி என்பன தமிழில் அதிகம் வந்துள்ளமையால் நாடகம் வானொலியிலும், சின்னத்திரையிலும் பெரு வெற்றி பெற்று வருகிறது. உலகம் எப்படி மாறினாலும் அதற்கேற்ப தானும் மாறிவரும் ஒரு கலையாக நாடகம் உள்ளது.

1.1) நாடகம் என்றால் என்ன?

1.2) முற்காலத்தில் நாடகங்கள் எங்கு நடைபெற்றன?

1.3) தமிழில் நாடக வளர்ச்சிக்குப் பணிபுரிந்தவர்கள் யார்?

1.4) சின்னத்திரை என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

1.5) இப்பகுதிக்கு பொருத்தமான தலைப்பு தருக.

(20 புள்ளிகள்)

3. கடிதம்: ____________________

5.கட்டுரை

2. தனிவாக்கியங்களை ஒரே வாக்கியமாக மாற்றி எழுதுக.

2.1) நான் சனிக்கிழமைகளில் தமிழ் வகுப்பிற்குப் போகிறேன்
நான் ஞாயிற்றுக்கிழமைகளில் சமய வகுப்பிற்குப் போகிறேன்

2.2) எனது நண்பனுக்கு தமிழ் பேசத் தெரியும்
எனது நண்பனுக்கு தமிழில் எழுத, வாசிக்கத் தெரியாது.

2.3) மாணவர்கள் கட்டுரை எழுதினார்கள்
மாணவர்கள் கட்டுரையை ஆசிரியரிடம் கொடுத்தார்கள்

2.4) கண்ணதாசன் பல கவிதைகள் எழுதியுள்ளார்
கண்ணதாசன் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்

2.5) நாம் கல்வியை கவனமுடன் கற்போம்
நாம் பண்புடன் வாழப் பழகுவோம்

2.6) எனக்கு பள்ளிக் கூட வேலைகளில் நேரம் போய்விடுகிறது
எனக்கு வீட்டில் தமிழ் படிக்க நேரம் கிடைப்பதில்லை

2.7) என் தங்கை படிப்பில் கெட்டிக்காரி
என் தங்கை விளையாட்டில் கெட்டிக்காரி

2.8) கண்ணன் நூலகத்திற்குச் சென்றான்
கண்ணன் புத்தகங்களை இரவல் வாங்கினான்.

2.9) அம்மா கைப்பையிலிருந்து தன் சாவியை எடுத்தாள்
அவள் கதவைத் திறந்தாள்

2.10) நான் தமிழ்ப்பாடத்தில் சிறந்து விளங்கினேன்
என் பெற்றோர் என்னைப் பாராட்டினர்.

(20 புள்ளிகள்)

3. உங்கள் வயதுடைய உறவினர் ஒருவர் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து இங்கு குடியேறியுள்ளார். அவருக்கு தமிழ்ப்பாடசாலைக்குச் சென்று தமிழ் கற்பதன் அவசியம் பற்றி என்ன கூறுவீர் என்பதை 50 சொற்களுக்கு குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

4. பின்வரும் சொற்களை வைத்து நான்கு சொற்களுக்கு குறையாமல் வசனம் எழுதுக.

4.1) கல்வி

……………………………………………………………………………………

4.2) பாடசாலை

……………………………………………………………………………

4.3) தொலைக்காட்சி

…………………………………………………………………………………

4.4) விபத்து

……………………………………………………………………………………

4.5) பெண்கள்

…………………………………………………………………………………

4.6) நாடகம்

…………………………………………………………………………………

4.7) வகுப்பறை

……………………………………………………………………………………

4.8) பெற்றோர்

…………………………………………………………………………………

4.9) சாப்பாடு

……………………………………………………………………………………

4.10) உறவினர்

……………………………………………………………………………………

(20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றி 100 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

5.1) எனது மறக்க முடியாத பயணம்
5.2) நல்ல நட்பு
5.3) காட்டுத் தீ

(20 புள்ளிகள்)

நன்றி.

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2012

வகுப்பு: 8 திகதி:- 16-06-2012 நேரம்: 2 ½ மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்:-

______________________________

1. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (20 புள்ளிகள்)

முன்னொரு காலத்தில் முதிர மலை நாட்டை குமணன் என்னும் குறுநில மன்னன் ஆண்டு வந்தான். அவன் தன்னை நாடிவரும் புலவருக்கெல்லாம் வாரி வழங்கினான். குமணனின் கொடைச் சிறப்பை அறிந்த பெருந்தலைச் சாத்தனார், தாமும் அவனை நாடிச் சென்றால் தம்முடைய வறுமை நோய் தீரும் என்று எண்ணினார். அவர் முதிரமலை நாட்டை நோக்கிச் சென்றார். அந்நாட்டை அடைந்த பெருந்தலைச் சாத்தனார், அங்கு குமணனுக்குப் பதிலாக இளங்குமணன் கொடுமையான ஆட்சி நடத்துகிறான் என்பதை அறிந்தார். குமண வள்ளல் நாட்டை விட்டுச் சென்று காட்டில் மறைந்து வாழ்கின்றார் என்ற செய்தியையும் அறிந்து வருந்தினார்.

மனம் தளராத பெருந்தலைச் சாத்தனார் குமண வள்ளலைக் காணக் காட்டை நோக்கிப் புறப்பட்டார். காட்டை அடைந்த பெருந்தலைச் சாத்தனாரால் குமண வள்ளலை அவ்வளவு எளிதாகக் காணமுடியவில்லை. பல இடங்களிலும் அவர் தேடி அலைந்தார். இறுதியில் அவர் ஓரிடத்தில் குமண வள்ளலைக் கண்டார். புலவரைக் கண்டு பூரித்த குமண வள்ளல் அவரை அன்புடன் வரவேற்றான். காய் கனி கிழங்கு வகை உணவுகளை அவருக்குக் கொடுத்து, அவரின் களைப்பைப் போக்கினான். இருவரும் மனங்கலந்து உரையாடி மகிழ்ந்தனர். அப்பொழுது குமண வள்ளல் புலவரை நோக்கி, "தாங்கள் இங்கு வந்த நோக்கம் யாது? " என அன்புடன் கேட்டான். அதைக் கேட்ட பெருந்தலைச் சாத்தனார், தமது வருகைக்கான காரணத்தையும் தமது வறியநிலை குறித்தும் அவனிடம் கூறினார். தமிழ்ப் புலவரின் வறியநிலையை நினைத்து குமண வள்ளல் பெரிதும் மனம் வருந்தினான்.

சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்த குமண வள்ளல் ஒரு முடிவுக்கு வந்தான். 'தமிழறிந்த இவர் உயிரை என் உயிரைக் கொடுத்துக் காப்பேன்; தலை கொடுத்தேனும் இந்தத் தமிழ்ப் புலவரைக் காப்பேன்!' என்ற உணர்ச்சியோடு புலவரைப் பார்த்து, " பெருந்தலைச் சாத்தனாரே! நான் வாரிவழங்கிய அந்நாளில் தாங்கள் வரவில்லை; ஆயினும், என் தம்பி இளங்குமணன் என் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு கொடுக்கப்போவதாக அறிவித்துள்ளான்; இதோ என் வாள்! தாங்கள் என் தலையைக் கொய்து கொண்டுபோய் அவனிடம் கொடுத்துத் தங்களுக்கு வேண்டிய பரிசைப் பெற்றுச் சென்று தங்களின் வறுமை நோயைப் போக்கி வாழ்வீராக!" என்று கூறினான். அதைக் கேட்ட புலவர் "அரசே! என்ன கொடுமை இது. தங்கள் தலையைக் கொடுத்தா இந்தத் தமிழ்ப் புலவன் பரிசு பெற்று வறுமை நோயைப் போக்க வேண்டும்.? " எனக் கூறிக் கண்ணீர் விட்டார்.

அரசன் கொடுத்த வாளைப் புலவர் கலக்கத்தோடு தன் கையில் எடுத்தார். எப்படியாயினும் குமணனையும் இளங்குமணனையும் ஒன்று சேர்த்து வைப்பேன் எனத் தனக்குள் உறுதி எடுத்துக் கொண்டார். அவர் குமணனிடம் விடை பெற்றுக் கொண்டு முதிரமலைக்குச் சென்றார்.

வாளுடன் வந்த பெருந்தலைச் சாத்தனாரைக் கண்ட இளங்குமணன் திடுக்கிட்டான். அண்ணனைக் கொன்றுவிட்டுப் பரிசு வாங்கப் புலவர் வாளுடன் வந்துள்ளார் என நினைத்துப் பதறினான். 'தானாடா விட்டாலும் தன் தசை ஆடும்' என்பது பெரியோர்கள் கண்ட முதுமொழியன்றோ? அண்ணன் இறந்தான் என்று எண்ணிய இளங்குமணன் மனம் நொந்தான். தக்க சமயத்தில் பெருந்தலைச் சாத்தனார் குமணனின் பெருந்தன்மையை எடுத்துக் கூறினார். புலவரின் மொழிகேட்ட இளங்குமணன் மனந்திருந்தினான். அக்கணமே தன் அண்ணனைத் தேடிக் காட்டிற்குச் சென்றான் தான் செய்த தவற்றிற்காகத் தன் அண்ணனிடம் மன்னிப்புக் கேட்டான். மீண்டும் அரசாட்சியைத் தன் அண்ணனிடமே ஒப்படைத்தான். ஆனாலும் குமணன் மீண்டும் அரச பொறுப்பைத் தம்பியிடமே ஒப்படைத்து விட்டுத் துறவு பூண்டான்.

1) இக்கதைக்கு பொருத்தமான தலைப்பு என்ன? (2 புள்ளிகள்)

---------------------------------------------------------------------------------------------------------------

2) பெருந்தலைச் சாத்தனார் குமணனைக் காண விரும்பியது ஏன்? (3 புள்ளிகள்)

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

3) முதிரமலை நாட்டிற்குச் சென்ற பெருந்தலைச் சாத்தனார் வருந்தியது ஏன்? (3 புள்ளிகள்)

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

4) அரசன் பசியுடன் வந்த புலவருக்கு எவற்றைக் கொடுத்து களைப்பைப் போக்கினான்? (3 புள்ளிகள்)

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

5) ஆழ்ந்த சிந்தனையில் இருந்த குமணன் என்ன முடிவுக்கு வந்தான்? (3 புள்ளிகள்)

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

6) தம்பி இளங்குமணன் எதைக் கொண்டுவருபவர்களுக்கு பொற்காசு கொடுப்பதாக அறிவித்திருந்தான்? (3 புள்ளிகள்)

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

7) இக்கதையில் வாளுடன் வந்த பெருந்தலைச் சாத்தனார் இளங்குமணனுக்கு எதை உணர்த்தினார்? (3 புள்ளிகள்)

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

2. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் அமைக்கவும். (20 புள்ளிகள்)

1. வெள்ளிவிழா

2. சனிக்கிழமை

3. நூல் வெளியீட்டு விழா

4. மாணவர்கள்

5. பட்டிமன்றம்

6. கதிரவன்

7. பொங்கல் விழா

8. வருடப்பிறப்பு (அல்லது புது வருடம்)

9. அன்னையர் தினம்

..........................................................................................................................................

10. வாணிவிழா

..........................................................................................................................................

..........................................................................................................................................

3. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து கோட்டில் எழுதுக. (5 புள்ளிகள்)

(இரை இறை)

1. நான் காலையில் . . . . . . . . வணக்கம் செய்தேன்.

புலி காட்டில் . . . . . . . தேடி அலைந்தது. (இரை இறை)

(வேலை வேளை)

2. எதையும் . . . . . . . . அறிந்து செய்வது நல்லது.

சிட்னியில் பலபகுதிகளில் கட்டட . . . . . . . நடைபெறுகிறது.

(வாள் வாழ்)

3. மன்னன் . . . . . . . ஏந்திப் போர் புரிந்தான்.

சிலவகைக் கடல் . . . . . . மீன்கள் ஆற்றில் முட்டையிடும்.

(விழா விலா)

4. பொங்கல் . . . . . . தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

வாணி . . . . . . . புடைக்க பலகாரங்களை உண்டாள்.

(கொள்வார்கள் கொல்வார்கள்)

5. வேடர்கள் காட்டில் மிருகங்களை வேட்டையாடி . . . . . . . . . . . . . ..

மக்கள் பால் பழம் முதலியவற்றை உணவாகக் . . . . . . . . . . . . .

4. **கீழே கொடுக்கப்பட்ட தகவல்களைக் பயன்படுத்தி வானொலியில் அறிவிப்பதற்கேற்ற பிறந்த நாள் வாழ்த்து 40 சொற்களுக்குக் குறையாமல் தயாரிக்கவும்.** (15 புள்ளிகள்)

பிறந்த நாள் கொண்டாடுபவர்: வாணி வயது 12

பெற்றோர் – அப்பா சுகுமார்

அம்மா அனுராதா

கொண்டாடும் இடம்: ஹோம்புஷ்ஷில் உள்ள அவர்களின் இல்லம்

வாழ்த்துபவர்கள்: அம்மா, அப்பா, அண்ணா, தங்கை, அம்மம்மா, தாத்தா, மாமா, மாமி, உற்றார், உறவினர், தமிழ்ப் பாடசாலையைச் சேர்ந்தவர்கள், மற்றும் நண்பர்கள்

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

5. உங்கள் தமிழ்ப் பாடசாலையில் நடைபெற உள்ள பரிசளிப்பு விழா வைபவத்திற்கு வருகை தந்து பரிசுகள் வழங்குமாறு அழைத்து முன்னாள் அதிபருக்கு 50 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக. (15 புள்ளிகள்)

6. **கீழுள்ளவற்றில் ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.** (25 புள்ளிகள்)

1. எமது தமிழ்க் கல்வி நிலையம் இம்முறை கொண்டாடிய “வெள்ளிவிழா” 2012 அல்லது
2. உங்களால் மறக்க முடியாத ஒரு சம்பவம்

# ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம்
**Tamil Study Centre, Homebush Inc**

Postal Address:P o Box 4019, Homebush NSW

www.tsch.org.au info@tsch.org.au


அரையாண்டுப் பரீட்சை 2012

ஒன்பதாம் வகுப்பு 21/2 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

ஆசிரியர்: ச.தேவராசா

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

வினா1. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக (15 புள்ளிகள்)

மொழி:

வாழ்க்கை:

சூரியன்:

சிரிக்கின்றேன்:

நிமிர்ந்தாள்:

அரங்கேற்றம்:

வசந்தகாலம்:

ஆடியது:

அரண்மனை:

பறவைகள்:

இயந்திரம்:

ஏறுவான்:

அதிகாலை:

பயங்கரம்:

மலர்கள்:

வினா 2. பின்வரும் பந்திகளை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழ் மக்களின் வாழ்க்கையில் கலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. நடனக்கலை, நாடகக் கலை, இசைக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, கட்டடக் கலை, போன்றவற்றை தமிழர்களின் கலைகளாகக் குறிப்பிடலாம். கலைகள் எவ்வாறு தோற்றம் பெற்றன? பழைய காலத்தில் விவசாயம் கடற்றொழில், கைத் தொழில், போன்ற தொழில்களை மக்கள் செய்தனர். அதிகாலையில் தொழிலுக்குச் சென்று உழைத்து களைத்து மாலையில் வீடு திரும்பும் மக்களுக்கு ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்கு பொழுது போக்கு அம்சங்கள் தேவைப்பட்டன. ஆடல், பாடல், கூத்து எனப் பல்வேறு கலைகள் மக்களை மகிழ்விக்க உருவாயின. அத்துடன்

"கல்லிலே கலை வண்ணம் கண்டான்" என்ற பாடல் வரிக்கமைய கற்களைச் செதுக்கி அழகான சிலைகளை உருவாக்கினான். கருங்கற்களில் கடவுள் உருவங்களைச் செதுக்கினான். இவ்வாறு சிற்பக்கலை தோற்றம் பெற்றது. காலப் போக்கில் சிற்பக்கலையை தொழிலாகக் கொண்ட மக்கள் கூட்டம் உருவானது. அவர்கள் சிற்பிகள் என்று அழைக்கப்பட்டனர்.

"உளி தாங்கும் கற்கள் தானே சிலையாக உருமாறும்" என்ற கவிஞர்

பா. விஜய் அவர்களின் பாடல் வரிக்கமைய சிற்பிகள் உளி என்று அழைக்கப்படும் இரும்பாலான ஆயுதத்தை உபயோகித்து அழகான சிலைகளையும் வழிபாட்டிற்குரிய விக்கிரகங்களையும் சிற்பிகள் உருவாக்குகின்றார்கள்.

பழைய காலத்தில் மரங்களின் பட்டைகள், இலைகள், பூக்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட இயற்கையான வர்ணங்களைப் பயன்படுத்தி சுவர்களிலும் குகைகளிலும் ஓவியங்களை வரைந்தனர். காலப்போக்கில் தாள்களில் சித்திரங்களை தீட்டத் தொடங்கினர். இவர்கள் ஓவியர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆரம்பத்தில் செம்மண், களிமண், என்பவற்றால் வீடு கட்டி பனையோலை, தென்னோலை போன்றவற்றால் கூரைகளை வேய்ந்தார்கள். பிற்காலத்தில் கட்டடங்களைக் கட்டி விதம் விதமான வீடுகளை அமைத்தனர். இதனைக் கட்டடக் கலையின் ஆரம்பம் எனலாம். தமிழ் மன்னர்கள் பிரமாண்ட மான கட்டடங்களைக் கட்டி கோயில்களை உருவாக்கிய போது கட்டடக்கலையின் வளர்ச்சி ஏற்பட்டது. ராஜ ராஜ சோழர்களால் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தஞ்சாவூரில் கட்டப்பட்ட தஞ்சை பெருவுடையார் கோயில் இன்றும் பலருக்கு வியப்பை அளிக்கின்ற கட்டடக்கலையைக் கொண்டதாக விளங்குகின்றது.

மக்களின் மனதில் உற்சாகம் கரை புரண்டு ஓடிய போது பாடல்களைப் பாடினார்கள். இசையோடு பாடல்களைப் பாடுவதற்காக யாழ், வீணை, மிருதங்கம், போன்ற இசைக்கருவிகளைக் கண்டு பிடித்தனர். இசையோடு பாடல்களைப் பாடுகின்றபோது அதற்கேறப நடனம் ஆடினார்கள். "பரந்ததொரு உலகை மேடை என்னும் வரம்பிற்குள் அமைத்து காட்டுகின்ற சக்தி மிக்க கலையே நாடகம்" எனப்படும். பழைய காலத்தில் அதிகளவான பாடல்களையும், அதற்கேற்றவாறு ஆடும் ஒருவகை நடனத்தையும் குறைந்தளவான வசனங்களயும் கொண்டு மக்கள் மத்தியில் அரங்கேறிய கூத்துக்களே நாடகங்களாக மாற்றம் பெற்றன. நாடகங்களிலிருந்து திரைப்படங்கள் உருவாயின.

1.மேலே கூறப்பட்ட விடயங்களுக்குப் பொருத்தமான தலையங்கம் எழுதுக (2 புள்ளிகள்)

________________________________

________________________________

2 தமிழர்களின் கலைகள் எவை (2 புள்ளிகள்)

________________________________

________________________________

3.உளிதாங்கும் கற்கள் தானே சிலையாக் உருமாறும்" விளக்கம் தருக ( 3 புள்ளிகள்)

________________________________

________________________________

________________________________

________________________________

________________________________

________________________________

4.தமிழர்களுக்குரிய இரு கலைகள் பற்றி சுருக்கமாக உங்கள் வசன நடையில் எழுதுக (4 புள்ளிகள்)

5."பரந்ததொரு உலகை மேடை என்னும் வரம்பிற்குள் அமைத்துக் காட்டுகின்ற சக்திமிக்க கலையே நாடகமாகும்" இக் கூற்று சரியா? பிழையா? காரணம் கூறுக(4 புள்ளிகள்)

வினா 3. பின்வரும் தொடர் வாக்கியங்களை 15 தனிவாக்கியங்களாக எழுதுக

(15 புள்ளிகள்)

கிழக்குத்திசையில் விடிவெள்ளி உதயமாக இருள் படிப்படியாக கலையத்தொடங்கிய போது மரங்களிலிருந்த பறவைகள் இராகம் பாட சேவலக்ள் கொக்கர்க்கோ என்று கூவ கீழ்வானத்தில் செம்மை நிறம் படர்ந்த பின்பு சூரியன் தனது உலாவை ஆரம்பிக்க எனது வீட்டுக் கடிகாரத்தின் பெரிய முள்ளும், சிறய முள்ளும் நேரே நேர நின்ற போது நேரம் சரியாக ஆறுமணி என்று அறிவிப்பதற்காக கடிகார மணி ஒலித்த வேளையில் அம்மா தூக்கம் நீங்கி எழுந்து காலைக்கடன்களை முடித்து காலை உணவை விரைவாக சமைத்தபிறகு என்னை படுக்கையை விட்டு எழும்புமாறு கூற நான் படுக்கையை விட்டு பிரிய மனமில்லாமல் எழுந்து பாடசாலை செவதற்கான ஆயத்தங்களைச் செய்து முடித்து பாடசாலைக்கு 8.30 மணிக்குச் சென்றேன்.

1 ______________________________

______________________________

2 ______________________________

______________________________

3 ______________________________

______________________________

4 ______________________________

______________________________

5 ______________________________

______________________________

6 ______________________________

______________________________

7 ______________________________

______________________________

8 ______________________________________________

______________________________________________

9 ______________________________________________

______________________________________________

10 ______________________________________________

______________________________________________

11 ______________________________________________

______________________________________________

12 ______________________________________________

______________________________________________

13 ______________________________________________

______________________________________________

______________________________________________

14 ______________________________________________

______________________________________________

______________________________________________

15 ______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

வினா 4.

பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் எழுதி நிறைவு செய்க.

(15 புள்ளிகள்)

அன்றொருநாள் அம்பாவும், அம்மாவும், நானும் தங்கையும் பேவூர்ட் வெஸ்ற் பீலட் (Burwood West Filed) கடைத்தொகுதிக்கு உடைகள் வாங்குவதற்காகச் சென்றோம். பல்வேறு கடைகளுக்கும் ஏறி, இறங்கி தேவையான உடைகளை வாங்கிக் கொண்டு வரும் பொழுது செய்தி முகவர் (News Agency) கடையில் குலுக்கல் சீட்டு (Lotto) 50 மில்லியன் வெள்ளிகள் பரிசு என்று விளம்பரம் செய்திருந்தார்கள். நாங்களும் ஒரு சீட்டு வாங்கலாமா? என்று தந்தையிட்ம் கேட்டேன். அதிஷ்டம் இருக்கிறதா இல்லையா என்று பரிசோதிக்க விரும்புகிறீர்கள். நீங்களே போய் வாங்குங்கள் என்று என்னிடம் பணத்தை தந்தார். ஆண்டவனை மனதில் நினைத்து ஒரு குலுக்கல் சீட்டை வாங்கினேன். செவ்வாய்க்கிழமை இரவு அச்சீட்டு குலுக்கப்பட்டது. தொலைக் காட்சியில் பார்க்க மறந்துவிட்டேன். மறுநாள் ஹோம்புஷ்சில் உள்ள செய்திமுகவர் கடையில இந்த சீட்டுக்கு பரிசு விழுந்திருக்கிறதா? பார்த்து சொல்லுங்கள் என்று கேட்டேன். பார்த்த கடைக்காரரின் கண்கள் ஆச்சரியத்தால் அகன்றன. உங்களுக்கு 10 மில்லியன் பரிசு விழுந்துள்ளது என்றார். இன்ப அதிர்சியினால் ஒரு கணம் ஆடாமல் அசையாமல் நின்றேன். பின்பு சீட்டை வாங்கி கவனமாக வைத்துக் கொண்டு வீட்டை நோக்கி ஓடினேன். (15 புள்ளிகள்)

வினா 5

உங்கள் தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற தமிழறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்க வருகை தருமாறு மூத்த குடிமக்கள் சங்கத்தின் தலைவருக்கு80 சொற்களுக்கு குறையாமல் ஒரு கடிதம் எழுதுக

(20 புள்ளிகள்)

வினா 6

பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி150 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக (20 புள்ளிகள்)

1. ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் வெள்ளி விழா

2. கோடைகாலமா? குளிர் காலமா ? சிறந்தது என்று ஒரு பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. கோடைகாலமே சிறந்தது என்று நீங்கள் உரையாற்ற இருக்கின்றீர்கள். அதற்காக நீங்கள் ஒரு பேச்சை எழுதுக.

ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம்
**Tamil Study Centre, Homebush Inc**
Postal Address:P o Box 4019, Homebush NSW
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2012

(வினாக்களின் எண்ணிக்கை 7,

எல்லா வினாக்களுக்கும் விடை தருக)

வகுப்பு 10

திகதி : 16-06-2012

ஆசிரியர் திருமதி கோகிலா மகேந்திரராஜா

மாணவர் பெயர்: ________________________________

1.பின்வரும் உரைப்பகுதியைவாசித்துஅதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக. (20புள்ளிகள்)

உலகம் முழுவதையும் உலுக்குகிற முதலாவது பொதுச்சுகாதாரப் பிரச்சனையாக இன்று விளங்குவது "மனச்சோர்வு"ஆகும். உளநலப் பிரச்சனைகளில் "தடிமன்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு வெகுவேகமாகவும் இலகுவாகவும் பரவும் நோய் இது. உலகம் முழுவதிலும் மிகப் பரவலாகக் காணப்படுகிறது. ஆயினும் தடிமனுக்கும் இதற்கும் ஒருமுக்கிய வேறுபாடு உள்ளது. தடிமன் ஒருபோதும் மனிதர்களைக் கொலை செய்வதில்லை. ஆனால் மனச்சோர்வு எம்மைக் கொன்றுவிடலாம். உலகத்தில் பொதுவாக எந்தஒருகாலப் பகுதியிலும் ஆறு வீதமானமக்கள் மனச்சோர்வுக்குரிய அறிகுறிகளாகக் காட்டுகின்றார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலக நாடுகளின் மாணவர்களிடையே, குறிப்பாகக் கட்டிளமைப் பருவ மாணவர்களிடையே தற்கொலை முயற்சியின் அதிகரிப்புவீதம் அதிர்ச்சிதரும் வகையில் அமைந்து காணப்படுகிறது. அதிலும் இலங்கை போன்ற போர் அனர்த்தம் இடம் பெற்ற நாடுகளில் இது மிக அதிகமாகஉள்ளது.

எனது மனதில் தோன்றும் எண்ணங்கள் ,நாம் விடயங்களை உள்வாங்கும் முறை, எமது மனதின் நம்பிக்கைகள், எமது மனப்பாங்குகள் ஆகியவையே எமது உணர்ச்சிகளை தீர்மானிக்கின்றன. நாம் மனச்சோர்வுக்கு உள்ளாகும் போது எமது உலகம் முழுவதும் இருண்டு தெரிகிறது.

மனிதர்கள் எல்லோரும் சிலசில சந்தர்ப்பங்களில் சந்தோசமற்றிருப்பது வழமைதான். ஆயினும் மனச்சோர்வு என்று வரும்போது அது மிகவும் வலிமை கூடிய நிரந்தர உணர்வாகக் காணப்படும். பாரிய மனச்சோர்வு ஏற்படும்போது எதிர் காலம் நம்பிக்கையற்று காணப்படும். நேரம் மிகமெதுவாக ஊர்வதாகத் தோன்றும். அன்புக்குரிய மனிதர்கள் ,ருசியான உணவு, விருப்பமான பொழுது போக்குகள் எல்லாம் அர்த்தமற்று காணப்படும். அதனால் இவர்கள்

மற்றவர்களிடமிருந்து பெருமளவு விலகிக் காணப்படுவர். தமது கடமை, பொறுப்புகளைக் கவனியாது விட்டுவிடுவர்.

இவர்கள் கதைக்கும் போது நிறைய நேர இடைவெளி விட்டு ஆறுதலாகவே கதைப்பர். இது "பேச்சுவறுமை"எனப்படும். உளச் சோர்வுடன் இருக்கும் போது உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியும் குறைந்துவிடுவதால் இவர்கள் உடல் நோய்களால் பாதிக்கப்படும் சாத்தியங்கள் அதிகரிக்கின்றன.

இவர்கள் உடனே உளவளத் துணையாளர்களிடம் போய் ஆலோசனை பெறலாம். சுவாசப் பயிற்சிகள் செய்யலாம். உச்சாடனம், தளர்வுப் பயிற்சி ஆகியன செய்வதும் பயன் தரும். இவை உதவாவிட்டால் மருத்துவர்களிடம் சென்று மருந்து பாவிக்கவேண்டும்.

I. உலகில் எத்தனை வீதமான மக்கள் ஒருகுறிப்பிட்டகாலப் பகுதியில் மனச் சோர்வுக்கு உள்ளாகின்றார்கள்?

______________________________

II. தடிமனுக்கும் மனச் சோர்வுக்கும் உள்ள ஒற்றுமைஎது?

______________________________

III. தடிமனுக்கும் மனச் சோர்வுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்ன?

______________________________

IV. எந்தப் பருவமாணவர்களிடம் தற்கொலை முயற்சி வீதம் அதிகமாக உள்ளது?

V. எமது உணர்ச்சிகளைத் தீர்மானிக்கும் விடயங்கள் எவை?

VI. மனச்சோர்வு நோயின் குணம் குறிகள் மூன்று தருக.

VII. பேச்சுவறுமை என்பதால் நீர் விளங்கிக் கொள்வதுயாது?

VIII. மன்ச் சோர்வு நோயாளர்கள் யாரிடம் உதவிக்கு போகலாம்?

2. கடிதம் எழுதுதல்.

உமது குடும்பத்தினர் அவசரமாக வெளிநாடு செல்லவேண்டி உள்ளது. ( இலங்கைஅல்லது இந்தியா) அக்காலப் பகுதியில் தமிழ் பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களைப் பற்றி உமக்கு அறியத்தருமாறு உமது தமிழ்ப்பாடசாலை நண்பருக்கு கடிதம் ஒன்று எழுதுக. ( 80 சொற்கள்,15 புள்ளிகள்)

3.எழுத்து: கட்டுரைஎழுதல்

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களில் கட்டுரைஎழுதுக. (20புள்ளிகள்)

I."தாய் மொழிக் கல்வி பெறுமதி வாய்ந்தது" என்ற தலைப்பில் உமது பாடசாலை ஒன்று கூடலில் நீர் ஆற்றவிருக்கும் பேச்சினை எழுதுக.

II.ஹோம்புஷ் தமிழ்ப் பாடசாலையின் வெள்ளிவிழா- ஒருபார்வையும் விமர்சனமும் என்ற தலைப்பில் சஞ்சிகை ஒன்றுக்குக் கட்டுரை வரைக.

III."வீட்டிலும் பாடசாலையிலும் உறவுகளைப் பேணுவதும் உதவி செய்வதும் பயன் மிக்கது "என்ற கருத்தை வலியுறுத்தும் உமது அபிப்பிராயங்களைத் தொகுத்து எழுதுக.

________________________________________________________________

4.கீழே தரப்பட்டசொற்களைப் பயன்படுத்தி 50 சொற்களுக்கு குறையாமல் ஒரு பந்தி எழுதுக.

உயிர் எழுத்து, மெய் எழுத்து, ஆய்த எழுத்து, வல்லினம், மெல்லினம், உயர்திணை, ஆண்பால், பலர்பால், ஒன்றன் பால், பொருட்பெயர், இடப் பெயர், குணப்பெயர், இணைமொழி, மரபுத்தொடர் ( 10 புள்ளிகள்)

5. கீழே தரப்படும் தனி வாக்கியங்களை இணைத்து தொடர் வாக்கியம் ஒன்று அமைக்கவும். (10புள்ளிகள்)

I. குழந்தை ஒன்று பிறந்தது

II. நிறை உணவாகிய பாலை அருந்தியது.

III. நாளொரு மேனியும் பொழுது ஒருவண்ணமும் வளர்ந்தது

IV. நல்ல பாடசாலையில் சேர்ந்து நன்றாகபடித்தது.

V. தமிழ் பாடசாலையில் தாய் மொழிகற்றது.

VI. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபட்டது.

VII. தமிழ்க் கலாச்சாரத்துடன் கூடிய விழுமியங்களை வளர்த்தது.

VIII. சமுதாயத்தில் பொறுப்புள்ள கடமைகளைச் செய்தது.

IX. வெற்றிகரமான வாழ்வு வாழ்ந்தது.

IX. முதுமையிலும் நிறைவுடன் மகிழ்ந்தது.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

6. கேட்டுக் கிரகித்துப் பதிலளித்தல்:பகுதி1:

I. "அன்ன யாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்றுபாடியகவிஞர் யார்.

II. நல்ல பாடசாலை ஒன்றின் இயல்புகள் இரண்டு கூறுக.

III. கல்வி நிலையம் ஒன்றிம் முதலீடுகள் எவை?

IV. நல்ல ஆசிரியர் ஒருவரின் இயல்புகள் இரண்டு கூறுக.

V. ஆசிரியர் எதனால் மலையோடு ஒப்பிடப்படுகிறார் என்று நினைக்கின்றீர்?

7. கேட்டுக் கிரகித்துப் பதிலளித்தல்: பகுதிII (10புள்ளிகள்)

I. இந்த உரையாடலில் வரும் சிறுவர் பாடல் எதைப்பற்றியது?

________________________________________

________________________________________

II. சிறுவர் பாடல் என்றால் என்ன?

________________________________________

________________________________________

III. இந்த உரையாடலில் வரும் சிறுவர் பாடலை இயற்றிய கவிஞர் புனைபெயர் யாது?

________________________________________

________________________________________

IV. இந்த உரையாடலில் வரும் கவிஞருக்கு எதற்காக சாகித்திய விருதுகிடைத்தது?

________________________________________

________________________________________

V. நல்ல கவிதை எழுத விரும்புபவர்கள் என்னசெய்ய வேண்டும்

________________________________________

________________________________________